செய்தி வெளியீடு எண்: 206 நாள் : 30.04.2016

## செய்தி வெளியீடு

### பொது தேர்தல் 2016– சமூக ஊடகங்களை கண்காணிக்க பிரத்யோக மென்பொருள்

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகம் சமூக வலைதளத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, முகநூல், டிவிட்டர், வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களை கண்காணிக்க "க்யூசெண்ட் பல்ஸ்" என்ற பிரத்தியேகமான மென்பொருளை வடிவமைத்துள்ளது. இதன் பொருட்டு பகவான் சைபெர்டெக் என்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தனது வழிகாட்டுதலை கூட்டாண்மை சமூகப் பொறப்பாக அளித்துள்ளது. இம்மென்பொருள் சமூகவலைதளத்தில் தகவல்களை கேட்டல், கண்காணித்தல் மற்றும் ஆராய்தலுக்கும் பயன்படும். தற்போது 100% வாக்களிப்பு என்ற குறிக்கோளுடன் தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகம் சமூக வலைதளங்களில் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளது. அவ்வலைதளங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் மற்றும் புகார்களை கேட்டு / ஆராய்ந்து உடனுக்குடன் அத்தகவலை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்ப இம்மென்பொருள் பயன்படும்.

1) தேர்தல் தொடர்பான விமர்சனங்கள் மற்றும் படங்கள்
2) தேர்தல் விதிமுறை மீறல்கள் பணப்பட்டுவாடா, மது விநியோகம், பரிசு கூப்பன்கள் வழங்குவது போன்ற புகார்கள்
3) வாக்காளர் அடையாள அட்டை, வாக்காளர் பட்டியல், வாக்காளர் அடையாள அட்டை போன்ற புகார்கள் கண்காணிக்கப்படும்.

**<u>செயல்முறை– சமூகவலைதளங்களில் கேட்டல் மற்றும் கண்காணித்தல்</u>**

வலைதளங்களில் தமிழ்நாடு தேர்தல் 2016 தொடர்பான பதிவுகள், படங்கள், படத்தொகுப்புகள் போன்ற செய்திகள் 24 சமூக ஊடகங்களில் கண்காணிக்கும் வகையில்

வடிவமைக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் அறியப்படும் விவரங்கள் கீழ்கண்ட வழிமுறைமூலம் கணினிக்கு மாற்றப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>பதிவுகளை வகைப்படுத்துதல்</u>**

சமூக வலைதளங்களிலிருந்து அறியப்படும் பதிவுகள் கணினிக்கு மாற்றப்பட்டு அவை மிகவும் சாதகமானவை, சாதகமானவை, நடுநிலையானவை, எதிர்மறையானவை மற்றும் மிகவும் எதிர்மறையானவை என்று வகைப்படுத்தப்படும். மேலும் அப்பதிவுகள் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்படும்.

1) புகார்கள்
2) தகவல் அறிதல்
3) பின்னூட்டம் மற்றும்
4) கருத்துக்கள்

பதிவுகளின் வகையைப் பொறுத்து புகார்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உடனுக்குடன் அனுப்பப்படும்.

மாநில அளவில் தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் இணை தலைமை தேர்தல் அதிகாரிக்கும் மாவட்ட அளவில் மாவட்ட தேர்தல் அலுவலருக்கும் தொகுதி அளவில் தேர்தல் நடத்தும் அலுவலருக்கும் அனுப்பப்படும். அனைத்து புகார்களையும் பார்வையிடஒருங்கிணைந்த தகவல் பலகை கணினியில் வழங்கப்படும்.

**<u>செல்லிடப்பேசி செயல்</u>**

புகார்களை உடனுக்குடன் அறியவும், தகுந்த நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்கு செல்லிடப்பேசி செயலி வழங்கப்படும்.

**<u>செயல்படுத்தும் முறை</u>**

சமூக வலைதளங்களில் இருந்து பெறப்படும் தகவல்கள் வகைப்படுத்தப்பட்டு செயலிமூலம் அதிகாரிகள் பார்வையிட வசதி செய்யப்படும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவை அனுப்பப்பட்டு குறை தீர்க்கப்படும் வரை கண்காணிக்கப்படும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**